ஓம்

தருமசீலன்.

" அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. "

(All Rights Reserved.)

புத்தகம் 5 } துந்துபி௵ ஆடி௴ 1922௵ ஜூலை௴ { சஞ்சிகை 4

நீதிச் செய்யுட் சிந்தாமணி.

தேகத்தைச் சீலத்தாற் பாதுகாக்க வேண்டுமெனல்.

" பவழவாய்ச் செறுவு தன்னு ணித்திலம் பயில வித்திக்
குழவிநா றெழுந்து காளைக் கொழுங்கதி ரீன்று பின்னாக்
கிழவுதான் விளைக்கும் பைங்கூழ் கேட்டிரேற் பிணிசெய்பன்மா
உழவிர்காண் மேயுஞ் சீல வேலியுய்த் திடுமி னென்றான்."

(இ-ள்.) "தேகத்தைப் பாதுகாத்துப் பயனடைதலாகிய பயிர்த்தொழில் செய்யும் உழவர்களே! நீங்கள் நன்மையடையும் மார்க்கத்தைக் கேட்பீராயின் கூறுகின்றேன் கேட்பீராக: பவழவாயாகிய கருப்பையென்னும் செய்யிலே, நித்திலம் போன்ற சுக்கிலமென்னும் விதையை விதைத்தலாலே, குழந்தையாகிய முளைதோன்றி, காலைப்பருவமாகிய செழித்த கதிரை யீன்று, பின்னர் மூப்பையுண்டாக்கும். இங்ஙனம் மூப்பை யுண்டாக்கும் பயிரை, நோயைச் செய்கின்ற தீவினைகளென்கின்ற பல மிருகக் கூட்டங்கள் இடையில் மேய்ந்து அழித்து விடுதலுங்கூடும். இத்தகைய தேகம் மூப்பினாலும் பிணியினாலு அழிவுறு முன்னர், இதைக்கொண்டு தவத்தைச்செய்து முத்தியடையவேண் மானால், இத்தேகத்திற்கு அத்தீங்குகள் நேராவண்ணம் சீலமாகிய வேலி அமைத்து உடம்மை அதனுட்செலுத்திப் பாதுகாப்பீராக என்றான்" எ தாம்.

"இத்தேகம் மூப்பை விளைவிக்கத்தக்கது. இடையில் பிணியினா டும் மாயும். ஆதலின், இத்தேகத்தின் உதவி கொண்டு தவஞ்செய்து யடைய வேண்டுமாயின் சீலமாகிய வேலியை ஏற்படுத்தி இத்தேகத்தை காத்து நற்பயனடைவீராக" என்பது இதன் கருத்து. சீலமாவது: சீ கள் பதினெண்ணாயிரங்களுமாம். பவழவாய்-பவழம்போன்ற வா கருப்பை. செறுவு-வயல். நித்திலம்-முத்து; சுக்கிலத்துக்குவமை குழவி-பிள்ளை. நாறு-நாற்று. பைங்கூழ்-பயிர்.

(சீவகசிந்தாம

தருமசீலன்.

துந்துபிஹூ ஆடிமீ".

"கிட்டாராயினும் வெட்டெனன் மற."

இதன்பொருள்:—"கிட்டார் ஆயினும்-நெருங்காத பகைவர்களா யிருந்தாலும், வெட்டெனல்—வெட்டு என்று பேசுவது போன்ற கடினமொழி கூறுதலை, மற—நீமறந்துவிடு" என்பதாம்.

"பகைவர்களா யிருந்தாலும் அவர்களிடத்தில் கடினமொழி பேசுதல் கூடாது" என்பது இதன் கருத்து. வெட்டு-எதையும் இரண்டு கூறுக்குவது. கடினமொழியும் இதைப்போல ஒற்றுமையைக் கெடுத்துப் பிரிவையும் விபரீதத்தையும் உண்டாக்கக்கூடியதாதலின், இதுவெட்டெனப் பட்டது. கடினமொழிபேசும் பெண்ணுக்கு வெட்டினி என்னும் பெயர் உலகவழக்கில் வழங்குதலும் காண்க. 'வெட்டொன்று துண்டிரண்டாகப் பேசுகின்றாயே' என்னும் வழக்கையும் உணர்க.

இனி, இதற்கு, "குற்றம் விசாரிக்குமிடத்துப் பகைவர்களா ...ருப்பினும் பொறுத்து விசாரியாமல், உடனேசிரச்சேதம் செய்து ... என்று கட்டளையிடுதலை மறந்துவிடு" என அரசனை நோக்கிய ...க்கூறலு மொன்று. எங்ஙனமாயினும் கடினமொழி பேசுதல் ...தென்பதே இதன் திரண்டபொருளாம். தீயமொழிகளால் பல ...ளுண்டு; இனியமொழிகளால் அநேகம்நன்மைகளுண்டு. பகை ...யிருந்தாலும் அவர்களிடத்து இனியமொழிபேசினால் அவர் ...கைநீங்கி நன்மைபுரிதலுங்கூடும். நேயர்களாயிருப்பினும் ...டத்தே கடினமொழி பேசினால், அவர்கள் ஒருகாலத்தில் ...ச் சீற்றங்கொண்டு தீங்கு புரிதலுங்கூடும். சிலகுடும்பங் ...வர்களா யிருப்பவர்கள், தங்களுக்கடங்கி இதமாயும் ... நடப்பவர்களிடம் இடைவிடாது கடினமொழிகளையே

பேசி அதிகாரம் செலுத்துவதால், எல்லோரும் பகைகொள்ளக் கலகமுண்டாகி வம்புவழக்குகள் நேர்ந்து அக்குடும்பங்கள் கெட்டுப் போவதையும், சிலகுடும்பத் தலைவர்கள், தங்களுக்கு விரோதமாக நடப்பவர்களிடத்திலும் இனிய மொழிகளையேபேசி வருவதால் அவர்கள்பகைநீங்கி அத் தலைவரிடத்தில் விசுவாசத்துடனும்அடக்கமாகவும் நடக்க அவர்களுக்குள் அமைதியேற்பட்டு அக்குடும்பம் விருத்தி யடைவதையும், மற்றதொழில் முறைகளில் உள்ளவர்களிடத்தும், உத்தியோகமுறைகளில் உள்ளவர்களிடத்தும் இங்ஙனமே விஷயங்கள் நடைபெற்று வருவதையும் நாம் அனுபவத்திற் காண்கின்றோம். ஆதலின், ஔவைப்பிராட்டியார் கடினமொழியின் தீங்கையும், இனியமொழியின் நன்மையையும் விளக்கும் பொருட்டே இங்ஙனம் பகைவரிடத்தும் கடினமொழிபேசுதல் கூடாதென்பதை வற்புறுத்திக்கூறினர். இந்நீதியைக் கடைப்பிடித்து யாவரும் எவ்விடத்தும் கடினமொழி பேசுதலைநீக்கி இனியமொழி கூறப்பழகுதல் எம்மையும் நன்மையுடைத்தாம்.

திருவருட்சகாயம்.

"க்ஷத்ர சூடாமணி"

(முன்தொடர்ச்சி-புத்தகம். 5. சஞ்சிகை-3-பக்கம்-72.)

(கோவிந்தையாரிலம்பகம்.)

அப்பால் மேதாவியாகிய 'ஜீவகன்' பாடசாலைக்குச் சென்று நண்பர்களோடு சேர்ந்து குருவிடம் பிரஸித்தமான கலைகளைக் கற்றான். அவன் ஆசிரியரிடம் வணக்கம், சுச்ருஷை, சாதுரியம் இவற்றைச் செலுத்தி வந்ததால், அவனுக்குச் சகல வித்தைகளும் சிந்தனைசெய்யப்பட்டவைகள் போலவே ஞாபகத்திலிருந்தன. குருவின் அன்பானது விருப்பங்களை யெல்லாம் நிறைவேற்றுமன்றோ? இப்பிராணிலோகத்தில் வித்வான்களெல்லாம் ஜீவகன் வரும் வரையிற்றானென்ற நிச்சயத்தினால் அவனுடைய ஆசிரியர் மிகுந்த பிரீதியை அடைந்தனர். தனது செய்கை தகாதசெய்கையேயாயினும் பயனையளிப்பின், மனிதரை மகிழ்விக்கும். வித்தையை ஸ்தாபித்தலைக் காட்டிலும் மேலான செய்கை வேறுண்டோ?

பின்னர் தெளிவான புத்தியையுடைய ஆசிரியர் ஒருசமயம் தனிமையில் தன் சமீபத்தில் ஜீவகனைவரவழைத்துப் பின்வருமாறு

போதிக்கலானார்:—"அன்புள்ள மாணவ! வித்தையால் விளங்குகின்றவனே! நான் கூறப்போகும் சரிதத்தைக் கவனத்துடன் கேட்பாயாக; அச்சரிதையைக் கேட்பதால் மிகுந்த கருணை ஏற்படும். முன்னொரு சமயம் வித்யாதரர் வசிக்கும் உலகில் 'லோகபால'னென்ற அரசன் உலகைப் பரிபாலித்துக் கொண்டு காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தான். ஒருசமயம் அவ்வேந்தன், 'செல்வம் கணப்பொழுதில் அழிவுறும்' என்று செருக்குற்றவர்களுக்குப் போதிப்பதுபோல, ஓர் மேகமானது பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே அதிசீக்கிரத்தில் அழிவுற்றதைக் கண்டான். அதனால் அரசனுக்கு வைராக்கியம் ஏற்பட்டது. மோக்ஷம்பெற விருப்பமுள்ளவர்களுக்குக் காலவசத்தினால் வைராக்கியம் பயனையளிக்கின்றதல்லவா? பின்னர் அப்பார்த்திவன் தனது புதல்வனிடம் இராஜ்யபாரத்தை ஒப்புவித்து விட்டு, ஜினதீக்ஷையை ஏற்றுக்கொண்டு தவஞ்செய்யத் தொடங்கினான். அந்த தீக்ஷையில் உடலிலும் அபிமானம் உண்டாகாதன்றோ?

இவ்வாறு இறைவன் தவஞ்செய்துகொண்டிருக்கையில் அவனை, * "பஸ்மக"மென்ற மகாரோகம் அணுகி—வருத்திற்று. அந்நோய் உட்கொண்ட உணவை உடனே சாம்பலாக்கி வந்தது; தீவினையை அற்பமான தவத்தினால் வெல்லுவதற்கு இயலாது; தீப்பொறியானது நனைந்தவிறகைப் பொசுக்க வியலுமோ? அதனால் இவ்வேந்தன் வலிமைகுன்றி அரசைப்போல் தவத்தையும் விட்டுவிட்டான். "நற்கருமங்கள் மிகுந்த இடையூறுகளையுடையன" என்ற முதுமொழி இப்பொழுது ஏற்பட்டதன்று. புதரில் மறைந்து பறவைகளைப் பிடிக்கும் வேடனைப்போல, தவஞ்செய்வதுபோல் அபிநயித்துக்கொண்டு மனம்போனவாறு நடப்பவன் பெரும்பாவியல்லவா? அவ்வரசன் கபடமான தவத்தினால் மீண்டும் மனம்போனபடி நடக்கலானான். அந்தோ! ஜினதீக்ஷயானது மனம்போனவாறு நடப்பதைத் தகைகின்றதல்லவா?

அப்பால் அவ்வரசன் பிக்ஷைசெய்ய விரும்பி, இந்நகரம் வந்து "கந்தோத்கட"னுடைய வீட்டுக்குச் சென்றான்; இவன் தபத்தோடு கூடியவனாயினும், தார்மிகருக்கெல்லாம் வைத்தியனாயிருந்தான். அறநெறிச் செல்வோர்க்கு அத்தகையோரேயன்றிப் பிறர் புகலிட

* "பஸ்மகம்." யானைத்தீ யென்னும் கொடியநோய்; இது எவ்வளவு உணவு உட்கொண்டாலும் பசியடங்காமற் செய்யும்.

மாகார். பாம்புக்குக்கீரிபோல, அவர்களுக்குப் பிறர் பகைவரேயாவர். பின்பு அவன் அங்கே நடுவீட்டில் வந்து புத்திரசிரேஷ்டனாகிய உன்னைப் பார்த்தான். நீயும் அவனைப்பார்த்தும் அவன் பசியோடிருந்ததையறிந்தாய். வத்ஸா! பிறகு புசிக்கத்தொடங்கிய நீ, பரிசாரகனிடம் அம்முனிவனுக்குப் போஜனம் பண்ணிவைக்கும்படி சொன்னாய்; அவனுக்குப் போஜனமும் பண்ணிவைத்தாய். அவ்வீட்டி உணவுகளை யெல்லாம் புசித்தும் அம்முனிவனின் வயிறுநிறையவில்லை. அந்தோ! பாபத்தின் கொடுமையை என்னென்று கூறுவது? ஆசைக்கடலை எவரே நிரப்புவார்? புசிக்காமலே முனிவனைப்பார்த்துக்கொண்டிருந்த நீ, வியப்புற்று, சந்தோஷத்துடன் கருணையினாலோ அல்லது அம்முனிவன் புண்ணியவசத்தினாலோ உன்கையிலிருந்த கவளத்தை அவனுக்குக் கொடுத்தாய். அதனைப் புசித்தவுடன் முனிவனின் குக்ஷி பூர்த்தியாயிற்று. உடனே அவனைவருத்திய யானைத்தீ மருந்தைக்கண்ட நஞ்சுபோல் அழிந்தது. வைராக்கியத்தினால் ஆசைக்கடல் நிறைகின்றதன்றோ? புண்ணியத்தின் மகிமையை என்னென்று இயம்புவது? முனிபுங்கவனும் அப்பொழுதே நிம்மதியை அடைந்து "பேருபகாரியாகிய இப்புதல்வனுக்கு யான் என்னகைம்மாறு செய்வே"னென்று சிந்தித்தான். அவன் "உயர்ந்த பயனையுடைய கல்வி கற்பித்தலே தக்கசெய்கை"யென்று தீர்மானித்துச் சிலகாலம் அவர் மாளிகையிலேயே இருந்துகொண்டு, உனக்குக் கல்வி கற்பித்து உன்னை வித்துவானாகச் செய்தான்.

கல்வியானது கள்வரால் கவரப்படுவதில்லை; காவலராலும் கொள்ளப்படுவதில்லை; சகோதரரால் பாகித்துக்கொள்ளப் படுவதுமில்லை; அது ஓர் சுமையாகவும் இருப்பதில்லை; கொடுக்குந்தோறும் நிறை வுறுவதேயன்றிக் குறை வுறுவதில்லை. ஆதலின், கல்விப் பொருளானது பொருள்கள் யாவற்றினும் சிறந்ததாகும்.

'𑌨 𑌚𑍋𑌰𑌹𑌾𑌰𑍍𑌯𑌂 𑌨𑌚𑌰𑌾𑌜𑌹𑌾𑌰𑍍𑌯𑌂 𑌨𑌭𑍍𑌰𑌾𑌤𑍃𑌭𑌾𑌜𑍍𑌯𑌂
𑌨𑌚𑌭𑌾𑌰𑌕𑌾𑌰𑌿 ।
𑌵𑍍𑌯𑌯𑍇𑌕𑍃𑌤𑍇𑌵𑌰𑍍𑌧𑌤 𑌏𑌵𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌧𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌧𑌨𑌪𑍍𑌰
𑌧𑌾𑌨𑌂 ॥

"வெள்ளத்தா லழியாது வெந்தணலால் வேகாது வேந்த ராலும்
கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும் நிறைவொழியக் குறைவு றாது
கள்ளற்கோ மிகவரிது காவலோ மிகவெளிது கல்வி யென்னும்
உள்ளத்தே பொருளிருக்க வுலகெல்லாம் பொருள்தேடி யுழல்கின் றாரே."

அறிவுடைமையினாலன்றோ நற்குடிப்பிறப்பு, பிரபுத்வம், நல்லோரால்கொண்டாடப்படுகை, சபையோராதல் முதலியவை உண்டாகின்றன. பலவாறு கூறுவானேன்? வித்துவான் எங்கும் பூஜிக்கப்படுகின்றான். அறிவுடைமையே மனிதருக்கு ஏற்றதாகும். அதுவே அபவர்க்கத்திற்கும் வழியாகும். அது பாலைப்போல் இனிய மருந்தாகும்'' என்றார்.

இவ்வாறு குருவின் விருத்தாந்தத்தைக் கேட்ட மாணவன் வாக்கினால் யாதும் பதிலுரைக்கவில்லை; ஆனால் தெளிந்த முகத்தினால் மட்டும் பதில் தெரிவித்தான். அதுவே குருசிஷ்பக் கிரமமாகுமன்றோ? குருவின் தூய்மையையுணர்ந்த 'ஜீவகன்' அவர்மீது பிரீதியடைந்தான். மாணிக்கத்தைப் பெற்றவன் அதன் சுத்தத்தினால் மிகவும் மகிழ்வானன்றோ?

பின்பு ஆசிரியர் ஜீவகனைப் பார்த்து ''வத்ஸா! பரிசுத்தமான *மூன்று இரத்தினங்களை யுடையவரும், தக்க பாத்திரங்களிடம் நட்புள்ளவரும், பிறருக்குபகரிப்பவரும், தருமத்தைப் பரிபாலிப்பவரும், பிறவிக்கடலினின்றும் கறையேற்றுபவருமா யிருப்பவரே குருவாவர்.

> " குலன், அருள், தெய்வங் கொள்கை, மேன்மை,
> கலைபயில் தெளிவு, கட்டுரை வன்மை,
> நிலம், மலை, நிறைகோல், மலர்நிகர் மாட்சியும்
> உலகிய லறிவோடு உயர் குணம் இனையவும்
> அமைபவன் நூலுரை ஆசிரி யன்னே.''

ஆசிரியரிடம் பக்தியுள்ளவனும், பிறவியிலிருந்து பயப்படுகின்றவனும், வணக்கமுள்ளவனும், அந்நெறியில் ஒழுகுபவனும், அறிவுள்ளவனும், மனவடக்க முள்ளவனும், சோம்பலற்றவனும், சிஷ்டனுமிருப்பவனே 'சிஷ்ய' னவன். குருவிடம் பக்தியானது

---

* மூன்று இரத்தினங்களின் விவரம்:—ஸம்மியக்தரிசனம் (நற்காக்ஷி), ஸம்மியக்ஞானம் (நல்ஞானம்), ஸம்மியக்சாரித்திரம் (நல்லொழுக்கம்) ஆகிய இவைகளே இரத்தினத்திரயமெனப்படும். அருகதேவன் பிரதிபாதித்த பொருள்களில் விபரீதம் அபிநிவேசம் இல்லாதிருத்தல் நற்காக்ஷியாம். ஸம்சயம், ஸம்மோகம், விப்பிரமம் என்ற கெட்ட ஞானத்தினின்றும் நீங்கி ஆத்மஸ்வரூபம் இதரபதார்த்தஸ்வரூபம் இவற்றை அறிந்து கொள்ளுவதே ஸம்மியக்ஞானமாம். பிறவிக்குக் காரணமான கர்மாவைத் தொலைப்பதில் முயற்சியுள்ளவனும் சிரத்தையுள்ளவனும் ஞானமுள்ளவனுமான ஜீவன் பாபகர்மங்களினின்றும் விலகியிருத்தலே ஸம்மியக் சாரித்திரமாம். இம்மூன்றும் சேர்ந்து ஓரிடமிருப்பின், மோக்ஷத்தையளிக்கும்.

முக்தியையுமளிக்கும் எனின் மற்றப்பயன் எதைத்தான் அளிக்காது? மூவ்வுலகுக்கும் விலையாயுள்ள மாணிக்கத்தினால் உமிக்குவியலைப்பெறுவதரிதோ? குருவைத் துவேஷிக்கும் நன்றி மறந்தவர்களுக்கு எந்தக்குணம்தான் அழிவுறாது? அவர்களுடைய வித்தையும் மின்னலைப்போல் தோன்றிமறையும். வேற்றமைமாம் நிற்குமோ? குருவைத்துவேஷித்தவனுக்குஎங்கும் நம்பிக்கையுள்ளவன் இரான். குருத்ரோகத்திற்குப் பயப்படாதவன் எந்தச் செய்கைக்கு அஞ்சுவான்?'' என்றும் போதித்தார்.

அப்பால் தான் செய்யவேண்டிய காரியத்தை நன்கு உணர்ந்த ஆசிரியர் கிருதகிருத்யனுன ஜீவகனுக்கு இல்லறதருமங்களை விதிப்படி உபதேசித்தார். அவ்வாசிரியர் மீண்டும் ஜீவகனிடம் அவன் இராஜகுமாரனென்பதை அறிந்து கொள்ளுமாறு அவனுடைய விருத்தாந்தத்தை ஆதிமுதல் அந்தம்வரையில் எடுத்துக்கூறினார்.

''ஸத்தியந்தர''குமாரனாகிய 'ஜீவகன்' குருவின்வாக்கியத்தினால் ''காஷ்டாங்கர''னே தந்தையாகிய அரசனைக் கொன்றவனென்று அறிந்துகொண்டு, கோபத்தினால் அப்பொழுதே, அவனைக் கொல்வதற்காக வில்லைவளைத்து ஆர்ப்பரித்து நின்றான். ஆசிரியர் அடிக்கடி தடுத்தும் அவனுக்குக் கோபம் அடங்கவில்லை; அந்தோ! தன்னையே கெடுத்துக் கொள்ளும் கோபிகள் எதைத்தான் செய்யார்கள்? பின்பு குருவானவர் ''வத்ஸா! சற்றுப்பொறு! போர்புரிவதற்கு இது காலமல்ல; நீ ஒருவருஷகாலம் எனக்காகப் பொறுத்திருக்கவேண்டும். இதுதான் நீ எனக்குக் கொடுக்கும் குருதக்ஷிணையாகும்'' என்று ஜீவகனை வற்புறுத்தி வேண்டிக்கொண்டார். அவனும் அதற்கிசைந்தான். அறிவுள்ளவன் குருவின் சொல்லை மீறிநடப்பனே? ''ஜீவகன்'' கோபகாலத்தில் பரவசமாயிருப்பதைக் கண்ட குருவானவர் மீண்டும் அவனுக்குப் போதிக்கலானார். குருவின் சொல்லானது அவ்வழியிற் செல்லாவண்ணம் தடுக்குமன்றோ? ஆதலின் அவர் அவனைநோக்கி, ''அன்புள்ளகுழந்தாய்! நீ மோகத்தினால் சுவாதீனமற்று ஏனோ கோபிக்கின்றாய்? விகாரமடைவதற்குக் காரணமிருந்தும் விகாரமடையாமையன்றோ தீரத்தனமாகும். கோபம் உன்னைக் கெடுக்கின்றதெனில், நீ என் கோபத்திடம் கோபிக்கவில்லை? கோபமானது தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் இவற்றையும், உயிரையும் அழிக்கின்றதல்லவா?

"வெஷி ஸொயிநி ஷகொவஃ கொவெ கொவஃ
க்ஷ-வெதா-நஷ ।
கொவஃ ஸவ-ுவிஸொஃயீ யக்ஷிம்ஷா ஜெ-ாயீகாத
வ-நஃ ॥"

கோபக்கனலானது தன்னையே தகிக்குமேயன்றிப் பிறவற்றை எரிக்காது; ஆதலால், கோபமுள்ளவன் பிறரைப் பொசுக்க விரும்பித் தன் சரீரத்திலேயே நெருப்பைக் கொள்ளுகின்றான்;

"வெகுளியே யுயிர்க்கெலாம் விளைக்குந் தீவினை;
வெகுளியே குணந்தவம் விரத மாய்க்குமால்;
வெகுளியே யறிவினைச் சிதைக்கும்; வெம்மைசால்
வெகுளியிற் கொடும்பகை வேறொன் றில்லையால்."

"இது தள்ளத்தக்கது; இது கொள்ளத்தக்கது" என்ற அறிவில்லாவிடின், கலைகளைக் கற்றும் வீணேயாகும். அரிசி கிடைக்காவிடின் நெற்குத்துவதனாற் பயனென்ன? அவ்வழியிற் செல்வோர்க்குத் தத்துவஞானமும் வீணேயாகும். கிணற்றில் விழுவோர்க்குக் கையில் விளக்கிருந்தும் பயனென்ன? நீ உனது அறிவுப்பொருளைமோகாதிக் கள்வர் கவராவண்ணம் காத்தல் வேண்டும்; மெய்யறிவுக் கேற்றபடி நல்வழியிற் செல்லவேண்டும். நீ பெண் முகத்தையே துவாரமாகக் கொண்டவைகளும், தன்மனம் போனபடியே செல்லுகின்றவைகளுமான தீயோராகும் பாம்புகளிடம் அகப்படாதே; அவைகள் எல்லோரையும் வருத்தும். அரவம் கடித்தால் சரீரம் அழியும்; தீயோர் கடித்தால் (சம்பந்தப்பட்டால்) அக்கணமே குடிப்பிறப்பு, பிரபுத்வம், அறிவுடைமை, பொறுமை, புகழ் முதலியனயாவும் அழிவுறுமன்றோ? தீயோர் பிறரைத் தீயோராக்குவர்; ஆனால், நல்லோர் பிறரை (தீயோரை) நல்லோராக்குவது இயலாது. பொருள்களை அழிப்பதுபோல் உண்டுபண்ணுவது இயலாதல்லவா?

"தூம்பினிற் புதைத்த கல்லும்,
துகளின்றிச் சுடர்கொ டாது;
பாம்புக்குப் பால்வார்த் தென்றும்
பழகினும் நன்மை தாரா;
வேம்புக்குத் தேன் வார்த் தாலும்,
வேப்பிலை கசப்பு மாறா து;
ஆம்பல நூல்கற் றாலும்
துர்ஜனர் தக்கோ ராகார்."

நல்லோரை முந்தியே முயற்சித்துச் சம்பாதிக்கவேண்டும். உலகில் உயர்ந்த மாணிக்கம் முயற்சியன்றியே கற்கள்போல் எளிதில் பெறக்

கூடுமோ? நல்லோர் சொல்லானது விழிப்பையும் தெளிவையும் கொடுக்கும். பிறவற்றால் பயனென்ன? நல்லோர் சொல், கடலிலே யன்றிப் பிறவிடத்திலுண்டான அமுதமன்றோ? இளமை, பலம், செல்வம் ஆகிய ஒவ்வொன்றும் விகாரத்தையுண்டாக்கும். இம்மூன்றும் ஓரிடம் சேர்ந்திருப்பின், அச்சேர்க்கையானது எதைத்தான் செய்யாது? ஆயினும், நீ அவைகளால் மாறுதலடையாதே! நல்லோர் மனமானது விகாரத்திற்குக் காரணமிருந்தும் மாறுபடுவதில்லை. அற்பமான நீரைக் கலக்கக்கூடிய தவளை கடல்நீரைக் கலக்குமா? எங்கும் எப்பொழுதும் தீயோர் இருக்கின்றனர். ஆயினும் உன்னுடைய புத்தி சலிக்காவிடின் அவர்களால் என்னசெய்ய முடியும்? ஆதலின், நீ தருமத்தில் பற்றுள்ளவனாயிரு; அதுதான் முக்தியை யளிக்கும். எவ்வளவோ உபதேசம் பண்ணினாலும் நல்வினையற்றவர்களுக்கு நற்புத்தியுண்டாவதில்லை; தக்கபாத்திரத்திடமோ தரும புத்தி வளர்கின்றது; ஆதலால், ஆத்மாவுக்கு ஆத்மாவே குருவாகும். செல்வத்தால் அறிவிழந்தவர்கள் ஹிதோபதேசத்தைக் கேட்பதுமில்லை; அதில் கவனஞ்செலுத்துவதுமில்லை; உபதேசித்தபடி ஒழுகுவதுமில்லை; ஒழுகினாலும் அதன்பயனைப் பெறுவதுமில்லை" என்றார்.

இவ்வாறு முனிவர் ஜீவகனுக்குப் போதித்து ஆசீர்வதித்துப் பின்பு ஜீவகன், கந்தோத்கடன் முதலியோரிடம் பிரயாசையுடன் விடைபெற்றுத் தவஞ்செய்வதற்காகக் கானகஞ்சென்றார். உலகில் உயிர்போகுங் காலத்தில் வைத்தியஞ்செய்ய வியலுமோ? பிறகு முனிவர் சந்நியாசங்கொண்டு தவத்தின் மகிமையால் இப்பூதவுடலை நீக்கிவிட்டு நித்தியமான ஆனந்தரூபத்தை அடைந்தார். இடையூறற்ற உபகரணங்கள் அவசியம் காரியத்தை ஈடேற்றுமல்லவா? ஆசிரியர் தபோவனஞ் சென்றதும் ஜீவகன் சோகத்தையடைந்தான். ஏனெனில் "கர்ப்பாதானம்" என்ற கர்மாவை மாத்திரம் செய்யாத பெற்றோரல்லவா? பின்பு அவன் தத்துவஞானமாகும் நீரால் சோகத் தீயை அவித்தான். சைத்யம் இருக்கும்பொழுது வெப்பம் வந்து பிடிக்குமா? பிறகு ஜீவகன் கல்வியால் அறிஞர் மனதிலும், காந்தியால் அரிவையர் மனதிலும், வில்வித்தை வன்மையால் தேரிலும் விளங்குங்கால், நடந்த விஷயத்தைக் கூறுவாம்:

அப்பால் ஒருசமயம் இடையர்களெல்லாம் ஒன்றுகூடி அரண்மனைவாயிலில் வந்துநின்று "காவல! நமது பசுக்களை வேடர்கள் களவாடிக்கொண்டு போய்விட்டார்கள்; நாங்கள் போர்புரிந்தும்

பயன்பெறவில்லை" என்று கூக்குரலிட்டனர். இப்பழிச் சொல்லைக் கேட்டதால் 'காஷ்டாங்கார'னுக்குக் கோபம் அதிகமாயிற்று; பூஜிக்கத்தக்கவரைத் தாழ்ந்தவர் அவமானஞ் செய்தால் அதனை அவர்கள் பொறுப்பது அரிதாகும். உடனே 'காஷ்டாங்காரன்' கண்கள் சிவக்கவும் மீசை துடிக்கவும் சினந்து, பசுக்களை மீட்டு வருமாறு தன்சேனைகளை அனுப்பினான். சேனாவீரர்கள் போய் வேடர்களோடு யுத்தஞ்செய்து தோற்றனர். தன் தேசத்தில் முயல், வேழத்திலும் சிறந்ததன்றோ? "வேடர்படை வென்றது" என்று கேள்விப்பட்டவுடன் இடைச்சேரியே நடுங்கிற்று. ஜீவனத்திற்கு அழிவுநேர்ந்தால் உலகம் பயப்படாதோ? இதற்கிடையில் "நந்தகோபன்" என்ற ஆயர்தலைவன் வேடரை வெல்வதற்காக யத்தனித்தான். துன்பமுற்றவர்கள் "இதற்கு என்ன செய்யலாம்?" என்று யோசிப்பார்க ளல்லவா? "பொருளைச் சம்பாதிப்பதும், சேர்த்தவற்றைக் காத்தலும், காத்தவற்றை அழித்தலும் துன்பமே; ஆதலின் மனிதர்களுக்கு மேன்மேலும் எல்லையின்றித் துன்பங்கள் உண்டாகின்றன. ஆயினும், இயன்ற அளவு தக்க பரிகாரம் செய்தல் வேண்டும்; வீணே சோகப்படுவதில் பயனில்லை." என்றிவ்வாறு "நந்தகோபன்" சிந்தித்துக் காஷ்டாங்காரனால் யாதொரு நன்மையும் ஏற்படாதென்று தீர்மானித்து, "வேடர்களை வென்று வரும் வீரனுக்கு என்புத்திரியாகிய கோவிந்தையை எழு பொற்பதுமைகளுடன் மணஞ்செய்து கொடுப்பேன்" என்று "தண்டோரா" மூலம் பிரசித்தப்படுத்தினான். இதைக்கேட்டு அந்நாட்டிலுள்ள வீரர்யாவரும் வேடர்க்கஞ்சி வாளா விருந்தனர். "ஜீவகன்" அதைக்கேட்டதும் தானே ஜயித்து வருவதாகக்கூறி அச்சத்தத்தை அடக்கினான். உதாரகுணமுள்ளவர்களுக்கு உலகமெல்லாம் குடும்பமேயன்றோ?

பின்னர் 'ஜீவகன்' கானஞ்சென்று வேடர்களோடு போர்புரிந்து அவர்களைவென்று பசுநிரையை மீட்டுவந்தான். மின்மினிப் பூச்சிகளால் போக்கவொண்ணாத இருளைக் கதிரவன் துரத்துகின்றானல்லவா? பசுக்களாகும் பொருள்கிடைத்ததால் 'நந்தகோபன்' மகிழ்ந்தான். பிராணிகளுக்குப் பிராணனைக் காட்டிலும் பொருளில்விருப்பமதிகமன்றோ? நகரத்தாரும் சந்தோஷித்தனர் பின்னர் நந்தகோபன் தன் பெண்ணை அலங்கரித்து, ஓர் பல்லக்கிலேற்றி, மங்கலவாத்தியங்கள் முழங்க, 'கந்தோத்கடன்' வீட்டுக்கு அழைத்துவந்து, ஜீவக'னுக்குக் கொடுப்பதாகத் தாரைநீர் வார்த்தான். உடனே 'ஜீவ

கன்' இடைப்பெண்ணை மணக்க மனமில்லாதவனாய் நந்தகோபனைப் பார்த்து, "ஆயர்குலபதியே! உன் புதல்விக்கு எனது நண்பனான 'பத்மாஸ்யன்' தகுந்தவன்; என்னைக் காட்டிலும் அவன் சிறந்தவன். ஆதலால் நான் அவனுக்காக இந்த நீரை ஏற்கிறேன்" என்று கூறி விட்டு, அவன் வார்த்த நீர்த்தாரையை ஏற்றுக்கொண்டான். நந்தகோன் இதைக்கேட்டு வருந்தினனாயினும் 'பத்மாஸ்ய'னும் நற்குண நற்செய்கைகளுள்ளவனென்று உணர்ந்து ஒருவாறு தேறுதலடைந்தான். பின்னர் 'நந்தகோபன்' 'கோதாவரி'யின் பெண்ணான 'கோவிந்தை'யை 'பத்மாஸ்ய'னுக்குச் சந்தோஷத்துடன் கொடுத்தான். அவனும் அவளை அக்னிஸாக்ஷியாக விவாகஞ்செய்து கொண்டான். பின்னர் 'நந்தகோபன்' பல பசுக்களையும் ஏழு பொற் பதுமைகளையும் பெண்ணுக்குச் சீதனமாகக் கொடுத்தான். இங்ஙனம் விவாகம் வெகு விமரிசையாய் முடிந்தபின்பு அவரவர் தம் தம் இருப்பிடத்திற்குச் சென்றனர்.

(இரண்டாவது :கோவிந்தையாரிலம்பகம் முடிந்தது.)

By M. M. Narayanaswamy Aiyar,
Mudikandan, P. O.

கெடுப்பதொழி.

இது, ஔவையாரின் அமுதவாக்கு. நீபிறரைக் கெடுப்பதை யொழித்துவிடு என்பது இவ்வாக்கியத்தின் பொருளாகும். கெடுப்பதென்றால் பிறரடையும் நன்மைகளைக்கண்டு பொறாது அவர்களுக்குத்தீங்கிழைத்தலும், பிறரும் நம்மைப்போல் உயர்ந்தநிலைமைக்கு வரக்கூடாதென்ற எண்ணத்தால் தீங்கிழைத்தலும், தமக்குப்பிறர் செய்யுந் தீமைகளுக்குப் பதிலாகத் தீங்கிழைத்தலும், பிறருக்கு வேண்டுமென்றே தீங்கிழைத்தலும் ஆகிய இவைகளேயாகும். பிறர் துன்புறுவதைக்கண்டு மகிழ்ச்சியடைவதற்காகவும் பலர்பிறருக்குத் தீங்கிழைக்காம லிருக்கவில்லை.

அநேகமாய் ஒருவர்க்கொருவர் தீங்கிழைத்துக் கொள்வது பொறாமையின் மிகுதியாலும், அறியாமையாலுமேயாகும். நம்மிலும் பிறர் பலவிதத்திலும் மேன்மையுற்றிருந்தாலும், அதற்குரிய காரியங்களைப் பிறர் செய்தாலும், நம்முடைய அளவுக்கே அவர்கள் வரும் உத்தேசத்திலிருந்தாலும் அவர்களைக் கெடுக்க நம்மனம் நாடி

கின்றது. இதற்குக்காரணம் அவர்கள் நம்மைப்போல் வந்து விட்டால் அல்லது நமக்குமேல் உயர்ந்து விட்டால், நமக்குள்ளமதிப்பு குறைந்துவிடுமே என்ற எண்ணமென்றே சொல்லலாம். இதை நோக்குங் நாம் பிறர் அடைந்திருக்கும் கேவல அந்தஸ்தை நோக்கி அந்த அந்தஸ்தைபடைந்திருக்கும் அவர்களுடையகீழான நிலையை நோக்கிப் பொறுமைபடைந்து நாமும் அவர்களைப்போலவே கீழான நிலைமையிலிருக்கக் கொடுத்து வைக்கவில்லையேயென்று நினைத்தால் நம்மனம் நடுவு நிலைமையிலிருந்தே அரசாட்சி செய்கிறதென்று நாம் சொல்லலாம். அதுமாத்திரம் நமது அனுபவத்தில் இல்லை. ஆனால் நமக்குமேல் பிறர் ஏறிவிட்டால் அடடா! நாம் என்ன எண்ணங் கொள்கிறோம்! அப்பொழுது நமமுடைய எண்ணத்தில் மண் விழாதா? நாம்மாத்திரம் பிறரையும் நன்மைகளுக்காகப் பொறுமையுற்று அவர்களுக்குத் தீங்கிழைக்க நினைக்கிறோமே! நாம் பிறரைப் பார்க்கிலும் அடையும் நன்மைகளைக் கண்டும் பிறர் நம்மீது பொறுமை கொண்டு நம்முடைய நன்மைகளையெல்லாம் கெடுக்கவும், நம்மை யழிக்கவும் ஒரு சிறிதேனும் நினைக்சாமல் இருக்கமுடியுமா? நம்மைப்போலவே அவர்களும் மனிதர்களேயன்றோ! நமக்குண்டாகுந் தியெண்ணம் பிறருக்கும் உண்டாகலாயன்றோ! அதனால் நாம் கெடமாட்டோமா?

இப்பிறப்பில் மனிதஜெனனம் பெற்ற நமக்கு உண்டாகும் பலாபலன் நாம் முற்பிறப்பிற் செய்த வினையின் பிரகாரமே வந்து சம்பவிக்குமென்று அறிஞர் கூறுகிறார். அதைப்போலவே நாமும் பிறரும் ஏற்கனவே செய்துள்ள நன்மை தீமைகளுக்குத் தக்கவாறு நன்மை தீமைகளை அனுபவிக்க இடமுண்டாகிறது.

நாம் முற்பிறப்பில் எந்தத்தீமையான காரியங்களைச் செய்தோமோ அவைகளின் பயனாகத் தீக்குணங்கள் பலவும் மனத்தெழுந்து நற்குணங்கள் பலவற்றையும் அழித்து மேலெழுகின்றன. இதை நோக்கியாகிலும் நாம் இப்பிறப்பில் நன்மைகளையே செய்து மறுபிறப்பிலாகிலும் நன்மை யெய்தவேண்டாமா? எப்போதும் பிறருடைய காரியங்களைக் கெடுப்பதிலேயே கண்ணாயிருந்து, "அவர்களைக் கெடுக்கவேண்டும்" என்ற எண்ணத்துடனேயே உறக்கங் கொள்ளும் நமக்குக் கடவுளினுடைய திருவருள் கிட்டுமா? மற்றும் ஜனங்கள்தாம் நம்மிடம் இருக்கும் கெட்டகுணங்களைக்கண்டு நம்மை நேசிப்பார்களா? நம்மையொருமனிதனாக மதிப்பார்களா? நாம் எந்த விதத்திலேனும் நன்மையை யடையமுடியுமா? நம்முடைய காரியங்

கள்தாம் ஜெயம் பெறுகின்றனவா? ஒன்று மில்லை. பொறுமையின் காரணமாக நாம் பிறரைக்கெடுக்க முற்படுவதால் நம்மையே கெடுத்துக் கொள்கிறோம். பிறருக்காக வெட்டுங் குழியில் நாமே விழுந்து மடிகிறோமன்றோ! ஆகலின் நாம் பொறுமையின் காரணமாகப் பிறரைக்கெடுக்க நினைப்பதால் ஒன்று மில்லை. அதனால் அவர்கள் கெடவே மாட்டார்கள்.

பிறர் நமக்குக் காரணங்கொண்டோ அல்லது காரணமின்றியோ தீங்கு செய்கிறார்கள். இதனால் அவர்கட்குத் தீங்கு செய்யவேண்டுமே என்ற சந்தேகமும் இவண் உதிக்கலாம். இதை நாம் ஆலோசித்துப் பார்த்தால் பிறர் நமக்குத் தீங்குசெய்தால் நாம் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்பதே ஏற்படும். நாம் பிறருக்குத் தீங்கு செய்திருந்து அதற்குப்பிரதிபாக அவர்கள் நமக்குத்தீங்குசெய்தார்களாயின் நாம் பொறுத்துக் கொள்ளவேண்டிய கடமை இருக்கிறது. நாம் முற்பகலிற் செய்ததைப்போல் பிற்பகலில் விளைந்தது. இதைப் பற்றிப் பேச்சே கிடையாது. நாம் பிறருக்குத் தீங்கு செய்யாமலிருக்கும்போதே பிறர் நமக்குத் தீங்கு செய்வார்களா? அப்படிச் செய்தாலும் நாம் முற்பிறப்பில் செய்த தீவினையின்பயனே இங்ஙனம் வந்து சம்பவித்ததென்று நினைத்துப் பொறுத்துக் கொள்ளல் வேண்டும். பிறர் நமக்குச்செய்த தீங்குக்காக நாம் செய்யவேண்டிய தீங்கு என்னவென்றால் 'ஆண்டவனே! இவர்கள் அறியாமையினால் எனக்குத் தீங்கு செய்துவிட்டார்கள். இனிமேல் இவர்கள் இவ்வண்ணம் செய்யாமலிருக்கும்படி இவர்கட்கு அறிவுறுத்துவீராக' என்றிறைஞ்சிக் கேட்டுக்கொள்ள வேண்டியதே யாகும். காரணமின்றி நமக்குண்டாகும் கெடுதிகள் எப்போதும் சம்பவித்துக் கொண்டே யிருக்கமாட்டா. இது ஏகதேசமாகவே நடைபெறும். இதற்கு நம் வினையே காரணமென்பதை, "செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தாக்கால்" என்ற ஔவை மூதாட்டியார் அமுதவாக்கே உறுதிப்படுத்தும்.

(தொடரும்)

மு. மாணிக்க நாயகர்,
உபாத்தியாயர்; கூனிச்சம்பட்டு, புதுவை.

தருமோபதேசம்.

(முன்தொடர்ச்சி புத்தகம் 4. சஞ்சிகை 12 பக்கம் 291.)

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

தொழிலாளர் கஷ்டநஷ்ட முடப்பு வாட்டஞ்
சுகதுக்க மனக்கலக்க மிவற்றை யெல்லாம்
விழியாலு முளத்தாலு நோக்கி டாமல்
வேலைமட்டு முடிந்துவிட்டாற் போது மென்று
பழியாக வவர்மனதைக் கசக்கி நாளும்
பக்ஷமின்றி யவரிடத்தே வேலை வாங்கி
ஒழியாமற் பணஞ்சேர்க்கும் வன்னெஞ் சர்க்கின்
கொன்றேனு முதவாம லொழியுந் தானே. (எங)

வேண்டியநல் லாசிரிய னிடத்தில் மிக்க
மேன்மைதருந் தொழில்களெல்லாங் கற்றுத் தேறி
ஈண்டுபொருள் தேடுகின்ற திறமை வந்தே
எய்தியபோ தவரைவிட்டு வெளியி லேகிப்
பூண்டகுரு விசுவாசந் தனை மறந்து
பொருள்தேடிக் களிக்கின்ற புல்ல ரெல்லாம்
மாண்டசம யந்தனில்வாய்க் கரிசி யின்றி
மண்தின்று கொடுநரகில் வாழ்கு வாரே. (எச)

அதிசயமாந் தொழில்புரிவோர் தம்மை யென்றும்
அன்பாகப் புகழாமல் பொறாமை யாலோ
மதியற்ற குரோதத்தி னாலோ மாற்றார்
வஞ்சகமாத் தருங்கூலி வாங்க லாலோ
சதிசெய்து நிந்தைமொழி கூறி யன்னோர்
தாம்புரியுந் தொழில்தனையுந் தாழ்த்திக் கூறி
அதிகமனச் செருக்கடைந்து திரிவோர் தம்மை
அற்பகுணச் சுணங்குகளென் றறைய லாமே. (எரு)

சேம்பையார்.

பாலபோத விளக்கம்.

(முன்தொடர்ச்சி புத்தகம்-5, சஞ்சிகை. 2, பக்கம்-38)

66. ஒரு குடும்பத்தில் எத்தனை சகோதரர்களிருப்பினும் பாகப்பிரிவினை செய்துகொள்ளாமல் எல்லோரும் ஒரேமனதாய் ஏக குடும்பமாயிருத்தலே நன்மையாம். இதனால் ஐசுவரியம் வருடந்தோறும் வளர்ந்தோங்கும். இக்குடும்பத்தோடு எவரும் பகை கொள்ளத் துணியார். எவ்வளவு பொருள்களிருப்பினும் அவற்றைப் பலசகோதரர்கள் பங்கிட்டுக்கொண்டால் அவை ஒவ்வொருவரிடத்திலும் கொஞ்சங்கொஞ்சமாகிக் குறைந்து போகும். அவர்கள் ஒன்றுசேர்ந்திருந்த குடும்பமானது பெருங் குடும்பமெனப் பெயரெடுத்ததுபோய்ப் பலசிறிய குடும்பங்களாகிக் கௌரவத்தை இழந்துவிடும்.

67. ஒரு குடும்பத்திலுள்ள எல்லாச் சகோதரர்களும் ஒழுங்குடையவர்களாய் மனமொத்திருந்தால் மாத்திரம் ஏக குடும்பமாயிருக்கலாம். அங்ஙனமின்றிச் சிலர் ஒழுங்குடையவர்களாகவும், சிலர் ஒழுங்கில்லாதவர்களாகவுமிருந்தால் ஒவ்வொருவரும் தனித்தனிபாகச் சொத்துக்களைப் பங்கிட்டுக் கொண்டுபிரிந்து தங்கள் தங்கள் விருப்பப்படி தொழில் செய்யவேண்டும். அவ்வாறே செய்யாதிருந்தால் குடும்பத்தில் எந்நேரமும் கலகங்களே உண்டாய்க் கொண்டிருக்கும்.

68. எத்தகைய உரிமை யுடையவர்களிடத்தும் ஒருவன் போய், ஒரு தொழிலையும் செய்யாமல் சும்மா விருந்துகொண்டு தண்டச்சோறுண்டு காலத்தை வீணே கழிக்கலாகாது; தன்னிடம் தொழில்செய்யச் சக்தி யிருக்கும் வரையிலும் ஏதேனுமொரு தொழிலைச் செய்து பொருள்சம்பாதித்துத் தான் தங்கியிருக்கும் குடும்பத்தாருக்கு உதவி செய்யவேண்டும். இவ்வாறு செய்யாவிடில் அவனைப் பலரும் தண்டச்சோற்று ராமனென்று நிந்திப்பார்கள்.

69. ஒரு குடும்பத்திற்சேர்ந்து தண்டச்சோறு சாப்பிட்டாலும் அங்குள்ளவர்களுக்கு எவ்வகையினாலும் உபத்திரவஞ் செய்யாமல் ஒழுங்காக நடந்து கொள்ளவேண்டும். வம்பான வார்த்தைகளைப் பேசிக் குடும்பத்தில் கலகங்களை உண்டாக்கக் கூடாது. எனக்கு அதுசெய்யவில்லை இதுசெய்யவில்லை என்று அக்குடும்பத்

தார் மீது குறை சொல்லலாகாது. தான் ஒரு சம்பாத்தியமும் செய்யாமல் வீணே சோறுண்டு கொண்டிருந்தாலும் குடும்பத்தில் சங்கடங்களை யுண்டாக்காமல் சந்தோஷத்தையேனும் உண்டாக்கிக் கொண்டிருக்கவேண்டும்.

70. ஒருவர் வீட்டிற்கு விருந்திற்குப்போனால் அவர்கள் அன்புடன் சமைத்துப்போடும் எந்த ஆகாரத்தையும் விருப்பத்துடன் உண்ணவேண்டும். அவர்கள் பிரயாசைப்பட்டுச் சித்தப்படுத்தி வட்டிக்கும் ஆகாரத்தில் அது குறை இது குறை யென்று அவர்களின் மனம் புண்ணாகும்படி செய்யக்கூடாது. சில வஸ்துக்கள் கிடைக்காத ஊர்களிற் போயிருந்துகொண்டு அந்த வஸ்துக்களை வேண்டுமென்று கூறி அங்குள்ளவர்களுக்குத் துன்பத்தைச் செய்யக் கூடாது.

71. சம்பாத்தியம் செய்ய வல்லமை யிருக்கும்போது கூடியவரை சுறுசுறுப்பாகப் பொருளைத்தேடிக் குடும்பச் செலவுக்குப் போதுமானவற்றைச் செலவுசெய்து மீதியைச் சேர்த்து வைக்க வேண்டும். அவ்வாறு சேர்த்துவைக்கும் பொருளானது அதனைத் தேடியவன், வேலைசெய்யச் சக்தியற்று வீட்டில் சும்மா உட்கார்ந்திருக்குங்காலம் வந்தபோது அவனுக்குதவுவதோடு அவனுடைய சந்ததிகட்கும் அனுகூலமாயிருக்கும்.

72. கையில் வருவதை யெல்லாம் அப்போதைக்கப்போது செலவு செய்துவிட்டு மேலும் மேலும் கடன்வாங்குகிறவன் மனிதரிற் பதராவான்; மிருகத்தினும் தாழ்ந்த மிருகமாவான். தேகம் தளர்ந்தகாலத்தில் உண்ணும் உணவுக்கும் உடுத்தும் ஆடைக்கும் மிகுந்த கஷ்டப்படுவான்.

73. கையிலுள்ள பொருள்களையெல்லாம் வீண்காரியங்களிற் செலவிட்டுவிட்டு வேதாந்தம் பேசுகிறவன் ஒன்றுக்குமுதவமாட்டான். ஒன்றையும் விரும்பாத மனத்துறவுடையவனே எதையும் சேமித்து வைக்காமல் செலவு செய்தற்குரியவனாவான். குடும்பத்திலுள்ளவன் பொருள்தனைப்போற்றி வாழவேண்டும்.

சற்குரு.

நரிவிருத்தம் மூலமும் உரையும்.

(முன்தொடர்ச்சி புத்தகம்-4. சஞ்சிகை-5. பக்கம்-124)

வேறு.

கோற லோம்புமின் கொன்றபி னூன்றடி
மேற லோம்புமின் மெய்ப்பொரு ளல்லன
தேற லோம்புமின் தீயவை யாவையுங்
கூற லோம்புமின் நற்குண மல்லன.

(இ-ள்.) (மனிதர்களே! நீங்கள் நற்கதியடையவேண்டின்)கோறல்-(உயிர்களைக்) கொல்லுதலை, ஓம்புமின்-பரிகரியுங்கள் (அதாவது: நீக்கிவிடுங்கள்), கொன்றபின்-ஒரு ஜீவனைக் கொலைசெய்த பிறகு, ஊன்-அதன் உடலிலுள்ள, தடி-தசையை, மேறல்-மென்று தின்னுதலை, ஓம்புமின்-பரிகரியுங்கள், மெய்ப்பொருள் அல்லன-உண்மைப்பொருள்களல்லாதனவாகிய பொய்ப் பொருள்களை, தேறல்-நிலையுள்ளன வென்றுணர்தலை, ஓம்புமின்-பரிகரியுங்கள், தீயவை யாவையும்-தீங்கானவைகளெல்லாவற்றையும், கூறல்-சொல்லுதலையும், நற்குணமல்லன-நற்குணமல்லாத தீக்குணங்களையும், ஓம்புமின் - அகற்றுங்கள், எ-று.

(வி-ரை) மனிதராயினார் நற்கதியடையவேண்டுமாயின், உயிர்கொல்லுதலையும், கொன்றபின் அதன் ஊனைத் தின்னுதலையும், பொய்ப்பொருள்களை உறுதிப்பொருள்க ளென்றுணர்தலையும், தீயன கூறுதலையும், துர்க்குணங்களையும் ஒழித்தல் வேண்டும். ஆதலின், இவற்றை நீக்குமாறு கூறினார் ஆசிரியர். கொலைத் தொழில் ஊன் தின்றற் பொருட்டும், பிறகாரணங்களாலும் நிகழ்வதாம். ஆதலின், பிறகாரணங்களால் நிகழுங்கொலையைக் 'கோறலோம்புமின்' என்றதனானும், ஊன் தின்றற்பொருட்டு நிகழுங்கொலையை 'கொன்றபின் னூன்றடி மேறலோம்புமின்' என்றதனானும் கடியுமாறு கூறினார் தேவர். ஊன் தின்றலே கொலைக்குக் காரணமாதலின், அதனைக் கடிதலே கொலைகடிதலாம். ஆகவே, 'ஊன்றடி மேறலோம்புமின்' என்றதனானே, 'கொலையை நீக்குங்கள்' என்பது தானே போதரும். "தினற்பொருட்டாற் கொல்லாதுலகெனின் யாரும், விலைப்பொருட்டாலூன்றருவாரில்" என்னுந் திருக்குறள் வெண்பா இங்கு ஆராயத்தக்கது. மெய்ப்பொருள்-வீடெய்தற்குரிய அறநூற் பொருள். பொய்ப்பொருள்கள்-உலகத்தில் தோன்றி மறையுஞ் சிற்றின்பப் பொருள்கள். தீயவைகூறல்-அசத்தியம், கடினமொழி முதலியவற்றைச் சொல்லுதல். நற்குணம்-கள், காமம், கொலை, களவு, சூது என்னும் பஞ்சமாபாதகங்களை விட்டு நீங்கியதருமசிந்தனை. தீக்குணம்-அப்பாதகங்களின் வயப்பட்ட கெட்டசிந்தனை. கோறல், மேறல், தேறல், கூறல் என்பன தொழிற்பெயர்கள். கொல்லுதல், மெல்லுதல் என்னுந்தல்லீற்றுத் தொழிற்பெயர்கள் புணர்ச்சிவிதியால் விகாரப்பட்டுக்கோறல், மேறல் எனவந்தன. மெல்லுதல் தின்றன்மேற்று.

கூறல் என்பதை அல்வீற்று எதிர்மறை வியங்கோள்வினை முற்றாகக்கொண்டு, 'தீயவையாவையுங் கூறாதிருக்க' எனப்பொருளுரைப்பினும் அமையும். மின்-ஏவற்பன்மை முன்னிலை விகுதி. (௪௪)

> விட்டு நீங்குமின் பற்றுள மின்மையாற்
> கட்டு மெண்வினை காற்றளை கட்டலால்
> ஒட்டி யின்னுயிர் கோறல் பிறர்மனை
> விட்டு நீங்குமின் கற்றறிந் தீரெலாம்.

(இ-ள்.) (அறிஞர்களே!) கற்று அறிந்தீரெல்லாம்-உறுதி மார்க்கத்தைக் கற்றுணர்ந்த நீங்களெல்லாரும், உளம்-நெஞ்சில், பற்று-உலக ஆசையை, விட்டு நீங்குமின்-விட்டு அகலுவீராக, (அங்ஙனம் விடுவீரேல் இருவினைகளும் நீங்கி வீடெய்துவீர்கள்), இன்மையால்-இங்ஙனம் பற்றொழித்தல் அல்லாமையினாலே (அதாவது: பற்றுடனிருந்தால்), எண்வினை-அஷ்டகருமங்களும், கட்டும்-உங்களை பந்திக்கும், (ஆதலின், அவசியம் பற்று நீங்கவேண்டும். இன்னும்), ஒட்டி-ஒருபிராணியின் சமீபத்திற் சேர்ந்து, இன்உயிர்-அதன் இனிய உயிரை, கோறல்-கொல்லுதலும், பிறர்மனை-அன்னியர் மனைவியின் சேர்க்கையை விரும்புதலும், காற்றளை-கால்விலங்காக, கட்டலால்-அவற்றையுடையாரைப்பிணித்து நரகத்தில் வீழ்த்துதலால், (அச்செயல்களையும்), விட்டுநீங்குமின்-விட்டு விலகுவீராக, எ-று.

(வி-ரை.) மனிதர், எத்தகைய விவேகிகளாயிருப்பினும், பற்று நீங்காத உள்ளத்தை யுடையவர்களாயிருந்தால், அவர்களை எண்வினைகளும் பந்திக்கும்; கொலையும், பிறர்மனை விரும்புதலுமுடையவர்களா யிருந்தால் அப்பாவங்களே அவர்கட்குக் கால்விலங்காய் அவர்களைப் பிணித்து நரகத்தில் வீழ்த்திவிடும். ஆதலின், நரகத்தைச் சாராமல் எண்வினைகளையும் விட்டு நீங்கி, முத்தியடைய விரும்புவோர் கொலை, பிறர்மனை நயத்தல், பற்றுளம் ஆகியவற்றை நீக்க வேண்டுமென்பது தோன்ற ஆசிரியர் இங்ஙனம், "பற்றுளம் விட்டுநீங்குமின், உயிர்கோறல் பிறர்மனைவிட்டு நீங்குமின்" என்று கூறினர். எண்வினைகளாவன:—ஞானவரணீயம், தரிசனவரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்திரம், அந்தராயம் என்பனவாம். (௪௫)

(இன்னும் வரும்.)

சேம்பூர். வீ. ஆறுமுகஞ்சேர்வை.

நீதிவாக்கியங்கள்.

(முன்தொடர்ச்சி-புத்தகம்-5, சஞ்சிகை-2, பக்கம்-39.)

45. சிநேகனிடத்தில் வஞ்சனை செய்யாதே; அவன் முற்றிலும் உன்னை நம்பி இருப்பான்; அதனால் உன் வஞ்சனை அவனிடத்தில் எளிதாக நிறைவேறும். ஆதலின், இது மகாபாதகமாம்.

46 சிநேகன் துக்கப்படுங் காலத்தில் நீயும் துக்கப்படு; அவன் சந்தோஷமடையுங் காலத்தில் நீயும் சந்தோஷத்தையடை.

47. சிநேகனுக்கு உதவிசெய்யவேண்டிய காலத்தில் நீ உன்னால் இயன்ற உதவியை அவசியம் செய்.

48. உனக்கு உதவிவேண்டிய காலத்தில் நீ சிநேகனிடத்தில் தக்க உதவிகளைப் பெற்றுக்கொண்டு அவனுக்குதவி வேண்டிய காலத்தில் ஒருதவியும் செய்யாமல் நழுவி விடாதே. இது மிகுந்த துரோகச் செயலாகும்.

49. நீ இலாபம் பெறுவதற்காகத் தந்திரமாக நண்பனைக் கொண்டுபோய்ச் சங்கடத்தில் சிக்கவைக்காதே.

50 சொந்தக்காரரா யிருந்தாலும் அன்னியரா யிருந்தாலும் வியக்கத்தக்க தொழில் செய்வோரைக் கொண்டாடு; அருவருக்கத் தக்க தொழில் செய்வோரை இழித்துக்கூறு. பாரபக்ஷமாக உயர்வைத் தாழ்வாகவும், தாழ்வை உயர்வாகவுங் கூறாதே. நடுவுநிலைமை தவறிய இச்செய்கை உன்னைப் பாழ்நரகிற் கொண்டுபோய்த் தள்ளிவிடும்.

51. குலநலம் பாராட்டிப் பாரபக்ஷமாக உன் குலத்தார்க்கே நன்மையையும், இதர வகுப்பார்க்குத் தீமையையும் செய்யாதே. இச்செய்கை ஒருகாலத்தில் உன் குலத்திற்கே நாசத்தையுண்டாக்கிவிடும். பொதுவாக எக்குலத்தார்க்கும் நன்மையேபுரி.

52. உன்னால் ஆகாத காரியங்களைமுடித்து விடுவதாக எண்ணியெண்ணி மனப்பால் குடித்துக்கொண்டு வீண்காலம் போக்காதே. எப்பொழுதும் முடியக்கூடிய காரியத்தையே சிந்தனைசெய். அதையும் சிந்தனை செய்வதோடிருந்து விடாதே; உடனே நிறைவேற்றுதற்கு முயற்சிசெய்.

53. பெரும்பான்மையும் கடன்வாங்காமல் ஜீவிப்பதற்கே முயற்சிசெய். இன்றியமையாத காரியங்களுக்குக் கடன்வாங்கியேதீர வேண்டியிருந்தால், சொற்பத்தொகை கடன்வாங்கு; அவ்வாறுவாங்கினால் இரவும்பகலும் அதனைத் தீர்ப்பதிலேயே சிந்தனைவைத்துக் கொண்டிருந்து வெகுசீக்கிரமாகத் தீர்த்துவிடு. வாங்கியகடனைக் கொடுக்கும் வழக்கம் உன்னிடத்திலில்லாவிட்டால் மற்றொரு சமயம் அவசர காரியத்திற்குக் கடன் வாங்கவேண்டியிருந்தால் ஒருவரும் உனக்குப் பணங்கொடுக்க மாட்டார்கள். அதனால், உனக்கு

மிருந்த கஷ்டமுண்டாவதோடு முன்னே வாங்கியகடன் வட்டியேறி உன் குடும்பத்தை அடியோடு கெடுத்துவிடும்.

54. உன்னிடம் பணம் மிகுதியாயிருந்தால் அதை வட்டிக்குக் கொடுக்காமல் நிலத்திலாவது வீட்டிலாவது போட்டுவை. கடன் கொடுத்தால் நம்பிக்கையானவர்களிடத்தில் சொற்ப வட்டிக்குக் கொடு. அனியாயவட்டிக்குக் கொடுத்துப் பிறர் குடும்பத்தைக் கெடுக்காதே. (தொடரும்)

உண்மைப் போதகன்.

லண்டன்மா நகரம்.

லண்டன் நகரம் 1888-ம் வருடத்தில் ஸ்தல ஆட்சி சட்டத்தின்படி ஒரு கவுண்டி ஆக்கப்பட்டிருக்கிறது. இதன் விஸ்தீரணம் 64816 சதுரமைல் (சுமார் எழுபத்தைந்தாயிரம் ஏக்கர்). இதில் 1911-ம் வருஷத்திய ஜனசங்கைப்படி. 45 லக்ஷம் ஜனங்கள் வசிக்கின்றார்கள். லண்டன்மாநகரில், 1036 தபாலாபீசுகளும், 3845 தபால் பெட்டிகளும், 33,000 (முப்பத்திமூன்று ஆயிரம்) தபாற்சேவகர்களும் உண்டு. 1476 லக்ஷம் காகிதங்கள் தினந்தோறும் பட்டுவாடா வாகியும், 2121 லக்ஷம் காகிதங்கள் பெட்டிகளிலிருந்து எடுத்து வெளியூர்களுக்கு அனுப்பப்பட்டும் வருகின்றன.

பூமிக்கு 20 அடிக்கு கீழ்போகும் மின்சார வண்டிகளுக்கு "அண்டர் கிரௌண்ட் ரயில்வே" என்றுபெயர். சுமார் 100 அடிக்குக் கீழும் 150 அடிக்குக் கீழும் செல்லும் இரண்டு தண்டவாளமுள்ள ரெயில்வேக்களுக்கு (குழாய்) டியூப் ரயில்வேக்கள் என்று பெயர். ஒரு வருஷத்தில் இப்பாதைகளின் வழியாகப் பிரயாணஞ் செய்வோர் 450 லக்ஷம் ஜனங்கள். அதன்றி பூமிக்குமேல் போகும் டிராம்வண்டிகள் 2500. இதில் பிரயாணஞ் செய்வோர் 700 லக்ஷம். தண்டவாள மில்லாத மோட்டார் ஆம்னிபஸ்வண்டிகளுண்டு. அதிற் போகும் ஜனங்களின் மொத்தம் வருஷத்தில் 720 லக்ஷம். ஆக ஒரு வருஷத்தில் பூமிக்குக் கீழும் மேலும் ஓடும் ரெயில்களிலும் டிராம் வண்டிகளிலும் போகும் ஜனங்கள் 1800 லக்ஷம் அல்லது 18 கோடி. இதன்றி மோட்டார்கள் 11,000 மும், குதிரைவண்டிகள் அநேகமுமுண்டு. லண்டனில் மொத்தம் போலீஸ் 2-,000. தேம்ஸ் நதி காவல் போலீஸ் 210 பேர். லண்டனில் முனிசிபல் சங்கப் பள்ளிக்

கூடங்கள் 950 அதில், 7½ லக்ஷம் மாணாக்கர்கள் வாசிக்கின்றார்கள். முனிசிபல் உபாத்தியாயர்கள் மொத்தம் 19,000. அதில் மாணாக்கர்களே உபாத்தியாயர் வேலைபார்ப்பவர்கள் 350.

பார்லிமெண்டு மகாசபைக் கட்டிடம்:—

இக்கட்டிடமானது 1836-ம் வருஷத்தில் பிளான் எழுதித் தயாரிக்கப்பட்டு இரண்டு லக்ஷம்பவுன் செலவில் கட்டி முடிந்திருக்கின்றது. இதன் விஸ்தீரணம் 8 ஏக்கர்நிலம். தேம்ஸ் நதிக்கரையில் 900 அடி நீளத்தில் கட்டிடம் நிற்கின்றது. பிரபுக்கள் சபை (House of Lords) 91 அடிநீளம், 45 அடி அகலம், 45 அடி உயரத்துடன் சித்திரவேலையும் தஞ்சாவூர்த் தங்கத்தகடு(நகாஸ்) வேலைகளும் செய்யப்பட்டிருக்கின்றன. சாமான்யஜன சபை (House of Commons) 75 அடி நீளம் 45 அடி அகலம் 41 அடி உயரம்; இதல்லாமல் நடைபாதைகள், உள்ளறைகள், ஹால்கள், கோர்ட்டுகள், சாப்பாட்டு விடுதிகள், புஸ்தகசாலைகள் நிறைந்துள்ளன. இதில் கெடிகார கோபுரம், விக்டோரியா கோபுரம், சக்கிரவர்த்திபவர்கள் ஏறும் படிக்கட்டு, காவல் அறை, ராஜா உடுப்புத் தரிக்கும் அறை, ராஜா மேடை, இளவரசர் அறை, சபாநாயகர் அறை, கமிட்டி அறைகள், இன்னும் இவை போன்றவை கணக்கில்லை. இவ்வளவும் சேர்ந்தது பார்லிமெண்டுக் கட்டிடம். விக்டோரியா கோபுரம் சற்சதுரம் 75 அடி, உயரம் 340 அடி; இதற்குள் ராஜா அவர்கள் மட்டும் பிரவேசிக்கும் வளைவு (ஆர்ச்சு) ஒன்று இருக்கிறது. மணிகோபுரம் சற்சதுரம் 40 (நாற்பது) அடி, உயரம் 320 அடி. 13½ டன் நிறையுள்ள மணி கெடிகாரத்தில் அடிபடுகின்றது. இந்த ராஜாங்கத்தில் இந்தக் கடிகாரத்திற்குப் பெரிய கடிகாரம் இல்லை. நான்குபக்கமுமுள்ள கடிகார டயல்களின் குறுக்களவு 21½ அடி. சிறுமுள் 11 அடி நீளம். பெண்டுலம் தொங்கல் 175 அடி ஆழம். பெண்டுலம் எடை 700 ராத்தல். பார்லிமெண்டு நடக்கும் பொழுது கெடிகாரத்தில் பிரகாசமான விளக்கு போடப்படுகிறது. பகலில் ஆங்கில இராஜாங்கக் கொடி பறக்கின்றது. இங்கிலாந்தின் முக்கியரகசியம் "எல்லோரும் சுறுசுறுப்பாயும், விசுவாசமாயும், ஒற்றுமையாயும் வேலைசெய்தல்" தான்.

குறிப்பு:—இவ்விஷயம் "ரவி, சத்திரப்பட்டி" என்னும் விலாசக்காரரால் சீர்திருத்தப் பத்திரிகையிலிருந்து எடுத்தெழுதப்பட்டு ஆனந்தபோதினி தொகுதி. 7-பகுதி-12-ல் பிரசுரமாயிருந்தது. இப்

போகமொரது என்மையைக் கருதி அப்பத்திரிகையிலிருந்தெடுத்து நம் சீலனிலும் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

ஜூபித்தர் சுவாமியின் விக்கிரகம்.

கிரீஸ் தேசத்தில் "ஒலிம்பிக்" என்னும் திருவிழா ஒன்று புராதனகாலத்தில் நடைபெற்றுவந்தது. இது, ஷை கிரீஸ்தேசத்தின் ஒலிம்பியா என்னும்மிடத்தில் ஜூபித்தசுவாமிக்காக 60. வருஷத்துக்கொருமுறை நடத்தப்படுவது. இந்த ஒலிம்பிக் திருவிழாவேற்படுவதற்கு நெடுங்காலத்துக்குமுன்னரே ஒலிம்பியா என்னும் அவ்வூரில் அத்தேசத்தாருக்குரிய ஜூபித்தர் என்னும் சுவாமிகோவில் இருந்தபடியால் அவ்வூர், அத்தேசத்தாரால் மகாபுண்ணியபூமியாக மதிக்கப்பட்டுவந்தது. அதனால், ஷை கிரீஸ்தேசத்திலுள்ள எல்லா மாகாணத்தார்களும் ஒன்றுசேர்ந்து இவ்வூரில்கூடி இக்கடவுளைத் தொழுவதற்கு ஒருகாரணமாயிருக்கும் பொருட்டே இந்தத்திருவிழாவை மேற்கண்டபடி 60. வருஷத்துக்கொருமுறை நடக்கும்படி ஏற்படுத்தியிருந்தார்கள். இக்கோவிலில் மிகவும் பெரிய ஜூபித்தர் விக்கிரகமொன்றிருக்கிறது. இவ்விக்கிரகம் ஏற்படுத்தப்பட்ட சரித்திரமும், இதன்தன்மையைப்பற்றிய விவரங்களும் மிக்க ஆச்சரியமாயிருக்குமாதலால் அவற்றைப்பற்றியும் இங்குஎழுதுவாம்:

இக்கிரீஸ் தேசத்தின் தென்பாகமாகிய பிலபொனீஸஸ் என்னும் பகுதியில் எல்லிஸ் என்னும் ஊரிடமுண்டு. அதற்கருகில் ஆல்பியஸ் என்னும் நதி ஓடுகின்றது அந்நதியின் சார்பாகத்தான் மேற்கூறிய ஒலிம்பியா நிருமிக்கப்பட்டிருக்கிறது. இது முற்காலத்தில் வியாபாரத்துக்குத் தலைநகராயிருந்தது. அதனோடு மேற்கண்ட திருவிழா ஏற்பட்டபின் நாளடைவில் கல்வியபிவிருத்தி, ஞானபிவிருத்தி, காவியம் எழுதும் சக்திமுதலியவற்றிற்கும் முக்கிய ஸ்தலமாயிற்று. அவ்வாறு இவ்வூரில் வியாபாரமும், கல்வியபிவிருத்தியும் அதிகப்பட்டவுடன், "இவ்வூருக்குத் தகுந்த ஜூபித்தர் சுவாமி விக்கிரகம் ஒன்று இருக்கவேண்டியது அவசியமாதலால், அதை இங்குச்செய்யவேண்டும்" என்று இவ்வூரார் தீர்மானம் செய்தார்கள். அவ்வாறு செய்தவர்கள், "நாம் செய்யும் விக்கிரகம் நமது உண்மைக் கடவுளினுடைய சக்திக்குத் தக்கபடியும், பார்ப்போர் அஞ்சும்படியும் பெரிதாயிருக்கவேண்டும்" என்றும் மதித்துக்

கொண்டார்கள். அதன்மேல் கிரீஸ் தேசத்திலேயே ஷை ஜூபித்தர் விக்கிரகத்தைச் செய்வதற்கு வேண்டிய சாமான்களெல்லாம் அதிக இலகுவில் கிடைத்தபடியால் அவர்கள் எல்லாவற்றையும் சேகரித்துக்கொண்டு பின்னர் சிற்பசாஸ்திரி யொருவன் மட்டும் வேண்டியிருந்தபடியால் அவனைத் தேடிக்கொண்டிருந்தார்கள். இப்படியிருக்க, கிறிஸ்து பிறப்பதற்கு 500 வருஷங்களுக்கு முன் கிரீஸ் தேசத்தில் வசித்தவனும், ஆதன்ஸ் நகரத்தானுமாகிய பிடியாஸ்என்னும் சிற்பியொருவன், தான் ஆதன்ஸ் நகரத்தார்களுடைய சுவாமியாகிய மினர்வாவுக்கு விக்கிரகம் செய்யும்படி அவர்கள் கொடுத்த தங்கத்தையும் தந்தத்தையும் துர்வினியோகம் செய்துவிட்டதாக அந்நகரத்தாரால் பொய்க்குற்றஞ் சுமத்தப்பெற்று ஷை ஆதன்ஸ் நகரைவிட்டு அப்புறப்படுத்தப் பட்டிருந்தபடியால், இவன் அங்கிருந்து புறப்பட்டு, எல்லிஸ் என்னும் நகரில் வந்து குடியேறியிருந்தான். இவன் அவ்வாறு குடியேறவே, மேற்கூறியபடி சிற்பியைத் தேடிக்கொண்டிருந்த ஒலிம்பியா நகரத்தார் தாங்கள் உத்தேசித்திருந்த ஜூபித்தர் சுவாமி விக்கிரகத்தைச் செய்யும்படி அவனிடம் வேண்டிக்கொண்டார்கள்.

அதன்மேல் இந்தச்சிற்பி தரைமட்டத்திலிருந்து கோவில்மூலஸ்தானத்தின் மோட்டைத் தலைபோ யிடிக்கும்படியாக மிக்க உயரமான இந்த ஜூபித்தர் விக்கிரகத்தை உட்கார்ந்த வடிவமாகத் தங்கத்தாலும் தந்தத்தாலும் செய்துமுடித்தான். இவ்வுருவம் நிற்பதாயிருந்தால் கருப்பகிரகத்துக்குமேல் அதிகதூரம் சென்றுவிடும். இவ்வாறு செய்துமுடித்தவுடன் எல்லோரும் இதைக்கொண்டாடத் தலைப்பட்டனர். இதன் வடிவமோ மிகவும் வியக்கத்தக்கது. இதன் தலையில் ஒலிவை இலைபால்செய்த கிரீடமொன்று வைக்கப்பட்டிருக்கிறது; வலக்கையில் ஜெயத்தின் அறிகுறியான ஒரு சுவாமியின் விக்கிரகம் தங்கத்தாலும் தந்தத்தாலும் செய்து வைக்கப்பட்டிருக்கிறது; இதுதவிர அவ்விக்கிரகத்தின் தலையிலும் ஒலிவையிலை விக்கிரகம் ஒன்று செய்துவைக்கப்பட்டிருக்கிறது; இதன் இடக்கையில் பலவகை உலோகங்களாலும் செய்யப்பட்ட செங்கோலொன்றிருக்கிறது; இஃதிருக்கும் கோவிலின் உச்சியில் கழுகின் சிலைபொன்று செய்யப்பட்டிருக்கிறது. இவ்விக்கிரகத்தின் அரையில் உடுத்தியிருக்கும் வஸ்திரமும், காலில் அணிந்திருக்கும் பாதரக்ஷையும் தங்கத்தால் செய்யப்பட்டிருக்கின்றன. மேற்கண்ட வஸ்திரத்தின்மேல் அநேகமிருகங்களின் உருவமும், அநேக புஷ்பங்களின் வடிவமும்

குறிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் இவ்விக்கிரகத்திற்கு ஆசனம் தங்கத்தாலும் மணிகளாலும் இழைக்கப்பட்டிருக்கிறது. அதில் இடையிடையே கருங்காலிக் கட்டையாலும் தந்தத்தாலும் சித்திர வேலை செய்யப்பட்டிருக்கிறது. இத்தகைய விக்கிரகத்தின் உயரம் இவ்வளவென்று ஒருவரும் சொல்லவில்லை. ஆயினும், இதன்முடி, கருப்ப கிரகத்தின் மேோட்டைத் தொட்டுக் கொண்டிருப்பதாலும், அந்தக்கருப்ப கிரகத்தின் உயரம் 60. அடியென்று சரித்திரக்காரர் கூறுகின்றபடியாலும், இக்கணக்கைக்கொண்டு ஆராய்ந்து பார்க்குமிடத்து இவ்விக்கிரகத்தின் உயரம் அறுபதடிக்குச் சிறிதுகுறைந்திருக்குமென்று விளங்குகிறது.

இந்த விக்கிரகத்தின் எதிரில் அங்குள்ள மனிதர்கள் சென்றால், தாம் சுத்தசத்தியக் கடவுளுடைய முன்னிலையில் நிற்பதாகவே நினைத்துக்கொள்வார்கள். இதற்குத் தெய்வத்தன்மை உண்டென்பதை உறுதிப்படுத்துவதற்காக அநேகம் கட்டுக்கதைகள் அங்குள்ளவரால் உண்டாக்கப்பட்டிருக்கின்றன; அவற்றுள் ஒரு கதையாவது:—"இவ்விக்கிரகத்தைச்செய்து முடித்தவுடன் இதைச்செய்த சிற்பியாகிய பிடியாஸ் என்பவன் இதற்கெதிரில் நின்றுகொண்டு, 'ஜூபித்தர் சுவாமியினுடைய தெய்வத்தன்மை இப்போது வெளிப்படவேண்டும்' என்று வணங்கினான்; அப்போது இவ்விக்கிரகத்துக்கெதிரில் தரையிலிருந்து ஒரு மின்னலொளி பிரகாசித்தது; அந்தப் பிரகாசம் தோன்றியவிடத்தில் அதற்கறிகுறியாக வெண்கலப் பாத்திரம் ஒன்று செய்துவைக்கப்பட்டது" என்பதே. மற்றகதைகளும் இப்படியே இருக்கும். இது நிற்க; இதை மேற்கண்டவாறு செய்து முடித்ததன்மேல் சுமார் 400. வருஷகாலம்வரையில் இவ்விக்கிரகத்துக்கு மகிமை மிகுந்திருந்தது. அக்காலத்தில் கிரீஸ் தேசத்திலுள்ள எல்லா நகரங்களிலிருந்தும் எல்லா ஜனங்களும் ஜாதி வித்தியாச மில்லாமல் கூட்டங் கூட்டமாக இதனிடத்துவந்து இதைத்தொழுதுகொண் டிருந்தார்கள். அவ்வாறு தொழும்போது அவர்கள் ஒவ்வொருவரும் சாக்ஷாத் பரப்பிரமத்தின் முன்னிலையில் இருப்பதாகவே எண்ணிக்கொள்வார்கள். இன்னும் இவ்விக்கிரகத்தை ஒவ்வொருமனிதரும் தம் ஆயுளுக்குள் ஒரு முறையாவது பார்க்காமலிருந்தால் பெரும்பாவம் விளையுமென்றும் ஷை கிரீஸ் தேசத்தாரெல்லோரும் தீர்மானித்துக் கொண்டிருந்தார்கள்.

உலோகாதிசய விளக்கம்.